12 மாத தகவல் மடல்

12 months Tamil



# ஆரம்ப அறிவுரைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது தளர் நடையிடும் குழந்தை் கூர்ந்து ஆராய்வதை விரும்புவார், அத்தோடு அவருக்கு உங்களது நேர்மறையான ஆதரவு தேவைப்படுகிறது.

உங்களது தளர் நடையிடும் குழந்தை சில ஒற்றைச் சொற்களை உபயோகிக்கத் தொடங்குவார் அத்துடன் பல ஒற்றைச் சொற்களைப் புரிந்து கொள்வார்.

தளர் நடையிடும் குழந்தை உங்களுடன் செலவழிக்கும் நேரங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பார், அவர் ஒரே பாட்டுகளையும் ஆட்டங்களையும் திரும்பத் திரும்ப பாடவும் விளையாடவும் முற்படுவார்.

தளர் நடையிடும் குழந்தைகள் கூடுதலான சொற்கள் உள்ள புத்தகங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத் தொடங்குவார்கள்.

தளர் நடையிடும் குழந்தைகள் தடிப்பான வண்ணம் தீட்டும் கோல்களால் அடையாளங்களையும், புள்ளிகளையும் வரைவதை விரும்புவார்கள்.

இது ஒரு கேந்திரமான மொழி விருத்தியடையும் பருவம். தளர் நடையிடும் குழந்தைகளுடன் விளையாடுவது தொலைக்காட்சி பார்வையிடுவதை விடச் சிறந்தது.

## இப்போ நீங்கள் என்ன செய்யலாம்?

உங்களது தளர் நடையிடும் குழந்தை கதைப்பதற்கு உதவுங்கள். உங்களது தாய் மொழியைத் தொடர்ந்து உபயோகித்து சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறியும் புதிய சொற்களையும் அறிமுகப் படுத்துங்கள்.

இலகுவான பாடல்களை விரல்களை அசைத்துக் கொண்டு பாடுங்கள்.

ஆட்டங்களையும் மோனைகளையும் உபயோகித்து உடலின் பாகங்களின் பெயர்களைக் கூறப் பழக்குங்கள்.

ஒவ்வொரு நாளும் படங்களைப் பார்வையிடவும் கதைகள் வாசிப்பதற்கும் குழந்தையுடன் சேர்ந்து ஒன்றாக உட்காருங்கள். செல்லும் இடமெல்லாம் புத்தகங்களையும் கொண்டு செல்லுங்கள்.

உங்களது தளர் நடையிடும் குழந்தை விளையாடும் போது தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகளின் விசைகளை நிறுத்துங்கள்.

உங்கள் வீட்டில் ஏற்படும் சப்தங்களைக் கேட்பதற்கும், பொருட்களைப் பார்வையிடவும் சில நேரத்தைச் செலவிடுங்கள்.

வீட்டில் அல்லது காரில் செல்லும்போது குழந்தைகள் குறுந்தகடுகள் மற்றும் ஒலி, ஒளிப் பேளைகளைச் செவிமடுக்கும்போது சேர்ந்து பாடுங்கள்.

உங்களது உள்ளூர் நூல்நிலையம் அல்லது விளையாட்டுக் குழுக்களுடன் சேர விரும்புகிறீர்களா?

## யார் உங்களுக்கு உதவி செய்ய முடியும்?

உறவினரும் நண்பர்களும்

உங்களது வைத்தியர் அல்லது சமூகத் தொழிலாளி, குழந்தை கவனிப்பு அல்லது விளையாட்டுக் குழு அலுவலர்கள்.

ஆரம்பச் சொற்கள் இணையத்தளம் www.earlywords.info
உங்களது தளர் நடையிடும் குழந்தைக்கு மேலதிகத் தேவைகள் இருந்தால் கூடுதலான யோசனைகளுக்கு உங்களது வைத்தியர், அல்லது தளர் நடையிடும் குழந்தையின் பிரத்தியேகத் தொழிலாளி ஆகியவர்களைக் கேளுங்கள்.

## எதிர்பாருங்கள்

இன்னுமொரு தகவல் மடல்- உங்களது குழந்தை 18 மாத வயதடையும்போது.

Early Words is a Children First project, funded by Families NSW ©